# மத்திய மாகாணக் கல்வித் திணைக்களம்
# கண்டி
# அலகுப் பரீட்சை

**வணிகக் கல்வி** **நேரம் : 1மணி 30நிமிடம்**

பகுதி I

1) பின்வரும் கூற்றுக்களுக்கு வணிக நடவடிக்கையை வெளிப்படுத்தும் மிகப் பொருத்தமான கூற்று எது?

(1) தாய் தனது வீட்டுத்தோட்டத்தில் உற்பத்தி செய்கின்ற மரக்கறிகளை தினந்தோறும் உணவிற்காக பயன்யடுத்தல்.
(2) தந்நை தனது மகனின் முடியை வெட்டுதல்.
(3) யோகட் உற்பத்தியாளர் சில்லறை வியாபார நிலையங்களுக்கு விற்பனை செய்தல்.
(4) தந்தை தனது வியாபார நிலையத்தினை மகனுக்கு நன்கொடையாக வழங்குதல்.
(5) நபரொருவர் தனது வாகனத்தை வேறு நபரொருவருக்கு விற்பனை செய்தல். (……)

2) பின்வருவனவற்றுள் வணிகமொன்றின் நோக்கமாக கருத முடியாதது?

(1)சந்தையில் நிலைநிறுத்தல். (2)இலாபத்தை உச்சப்படுத்தல்.
(3)விற்பனையை உச்சப்படுத்தல். (4)வணிகரின் தனிப்பட்ட திருப்தி.
(5)தொழில் உருவாக்கம். (……)

3) A - நிர்வாகம் 1. தைத்த ஆடைகளை விநியோகித்தல்.
B - உற்பத்தி 2. சம்பளக் கொடுப்பனவு.
C - சந்தைப்படுத்தல் 3. வருகை அட்டவணையை பேணுதல்.
D - நிதிக்கருமம் 4. பதவியுயர்வு வழங்கல்.
E – மனித வளக்கருமம் 5. இருப்புக் கட்டுபாடு.

வணிகக்கருமங்களுக்கு சரியாக பொருந்தும் தொகுதியையும் தெரிவு செய்க.

(1)A-3, B-5, C-1, D-2, E-4 (2)A-4, B-1, C-5, D-2, E-3 (3) A-2, B-4, C-3, D-5, E-1
(4)A-5, B-2, C-5, D-1, E-3 (5)A-3, B-4, C-5, D-2, E-1 (……)

4) பொருளாதாரச் சூழல் -A 60 வயதுக்கு மேற்பட்டோரின் சனத்தொகை அதிகம்
மக்கட் சூழல் -B உலக நாடுகளின் நிலைபேறான அபிவிருத்தி
தொழிநுட்ப சூழல் -C புதிய மருந்து கண்டுபிடிப்பு
பூகோளச் சூழல் -D வருமானப் பரம்பல்

பேரினச்சூழல் காரணிகளின் சரியான உதாரணங்களைக் காட்டும் விடை

(1)ABCD (2) DACB (3)CDBA (4)CABD (5)DABC (……)

5) வணிகத்தின் அக்சூழலுக்கான பலத்தையும் புறச்சூழலுக்கான வாய்பையும் எடுத்து காட்டும் விடையைத் தெரிவு செய்க.

(1) நிதி உறுதித்தன்மையும் ஊழியர்களின் விசேட திறன்களும்
(2) புதிய உற்பத்தி முறைகளும் நுகர்வோர் வாழ்கைப் பாங்குமாற்றமும்
(3) உள்ளூர் உற்பத்தி அதிகரித்தலும் சனத்தொகை வயது அதிகரித்தலும்
(4) வணிகளுக்கான வரிச்சலுகைளும் அரசு கடன் வழங்கலும்
(5) வியாபார சின்னம் காணப்படலும் புதிய வணிகம் ஆரம்பிக்க திட்டமிடலும் (……)

(5x2=10புள்ளிகள்)

6) மனிதத் தேவைகள் ,விருப்பங்கள் நிறைவேற்ற…..…………………. , ……..……………சந்தையின் மூலம் பெற்றுகொள்ளப்படும்.

7) இல்லத்தரசிகள் வீட்டுத்தோட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் கீரை வகை ………………….. எனவும்…………………………. விளைவாக மிகை உற்பத்தி ஏற்பட்டது.

8) வலையமைப்பினூடாக கொள்வனவு விற்பனை இடம் பெறுவது ………………………எனவும் வணிகங்கள் வலையமைப்பினூடாக அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளல் …………………………..எனவும் குறிப்பிடப்படும்.

9) மிகை உற்பத்தியை மிகை உற்பத்தியுடன் பரிமாற்றம் செய்தல்…………………….. எனவும் நுகர்வுப் பொருட்களை உற்பத்தி செய்ய பயன்படுத்தப்படும் பொருட்கள்…………………… எனவும் அழைக்கப்படும்.

10) …………………………மற்றும் ………………………நாளாந்தம் பெருமளவு கழிவுப்பொருட்கள் சேருதல் பூகோள ரீதியான பிரச்சினை ஆகும்.

11) வணிகத்தின் விருத்தி தொடர்பில் அறிந்து கொள்ள………………………அக்கறை காட்டுவதோடு தரமான பொருட்களை சேவைகளைப் பெற …………………………அக்கறை காட்டுகின்றனர்.

12) நுகர்வோரின் அறிவு, அவர்களது வருமானம் வணிகங்களுக்கு…………………………… உருவாக்குவதுடன் சில வணிகங்களுக்கு அவை…………………………உண்டாக்கும்.

13) விவசாயம், காட்டுவளம், மீன்பிடி………………………….…எனவும் தகவல் தொடர்பாடல் நடவடிக்கைகள்…………………………..எனவும் குறிப்பிடப்படும்.

14) வணிகமொன்றின் அகச்சூழலை அறிந்து கொள்வதன் மூலம் ……………………….. , …………………………. அறிந்து கொள்ள முடியும்.

15) வளங்கள்..………………………., ……………………பொருட்கள் சேவைகள்.

(10x2=20புள்ளிகள்)

16) பொருட்களுடன் ஒப்பிடும் போது சேவைகளின் சிறப்பியல்புகள் ……………..……….. , ………………………… , ………………………… , …………………………….

17) கைத்தொழில் புரட்சியுடன் வளர்ச்சியடைந்த துணைநிலைச் சேவையுடன்..…………………. , ………………………… , …………………………. , …………………………..

18) வணிகங்களை வகைப்படுத்தும் பல்வேறு நியதிகள் 4 குறிப்பிடுக………………………. , ………………………… , ………………………… , ……………………………

19) தளபாட உற்பத்தி நிறுவனமொன்றை கருத்திற் கொண்டு, அதன் அண்மிய சூழல் காரணிகளுக்கான 4 உதாரணங்கள் தருக ………………………….. , ………………………… ………………………… , ……………………………

20) பேரினச்சூழல் காரணிகளில் தொழிநுட்பச் சூழலுக்கான 4 உதாரணங்கள்...…..………...…… ………………………… , ………………………….. , ……………………………

(5x2=10புள்ளிகள்)

## பகுதி II

**01)** சுப்பு சிறிய அளவில் தானியங்கள்,காய்கறிகள்,பழங்கள் என்பவற்றை விளைவிக்கும் விவசாயி ஆவார். தனது விளைச்சலில் குடும்ப நுகர்வுக்கு பயன்படுத்தி மிகையை சில்லறை வியாபார நிலையங்களுக்கு வழங்குகிறார்.விற்பனையில் கிடைக்கும் பணத்தில் தனது குடும்ப நுகர்விற்கான தேவையை பூர்த்தி செய்யும் பொருட்களை கொள்வனவு செய்கிறார்.

1) மேற்படி நிகழ்விலிருந்து நேர் உற்பத்தி, நேரில் உற்பத்தி ஆகிய எண்ணக்கருவை விளக்குக.
2) தேவைக்கும் விருப்பங்களுக்கும் இடையிலான வேறுபாடுகள் தலா 4 வீதம் குறிப்பிடுக.
3) பொருட்கள், சேவைகளுக்கிடையிலான வேறுபாடுகள் குறிப்பிடுக.
4) பொருட்களுடன் ஒப்பிடும் போது சேவை உற்பத்தி வணிகங்கள் அதிகரிப்பதில் செல்வாக்கு செலுத்தும் காரணிகள் 4 குறிப்பிடுக.
5) வணிகங்கள் பண்புகள் 4 குறிப்பிடுக. (5x4=20புள்ளிகள்)

**02)** ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்ட கைத்தொழில் புரட்சி காரணமாக இது வரையில் காணப்பட்ட குடிசைக் கைத்தொழில்கள் பாரிய கைத்தொழில்கள் எனும் நிலைக்கு மாறியமை வியாபாரமும் விரிவடைந்தது.

1) வணிகப்பரம்பலின் வளர்ச்சிக் கட்டங்களை குறிப்பிடுக.
2) வர்த்தகம் என்பது வியாபாரத்திலும் கூடுதலான ஒன்றாகும். ஆயினும், வியாபாரம் இன்றி வர்த்தகம் இடம் பெற முடியாது. விளக்குக.
3) வணிகமொன்றின் உள்ளீட்டு வெளியீட்டுச் செயன்முறையொன்றை வரைபடத்தின் மூலம் காட்டுக.
4) நிகழ்காலத்தில் தகவல் தொழிநுட்பத்தின் விளைவாக வணிகத்துறையில் ஏற்பட்ட நவீன போக்குகள் 4 குறிப்பிடுக.
5) உற்பத்தியின் தன்மைக்கேற்ப வணிகங்களை வகைப்படுத்தி உதாரணங்களுடன் தருக.

(5x4=20புள்ளிகள்)

**03)** பாடசாலைக்கருகில் புத்தகம் எழுதுகருவிகள் விற்பனையகம் நடாத்தும் முத்து வணிகத்தின் விருத்தி தொடர்பில் பல சவால்களை எதிர்கொள்கிறார்.

1) இந் நிறுவனத்தின் மீது அக்கறை காட்டும் 4 தரப்பினரைக் குறிப்பிட்டு அக்கறை காட்டுவதற்கான காரணங்கள் தலா ஒன்று வீதம் குறிப்பிடுக.
2) வணிகச் சூழலை கற்பதன் ஊடாக வணிகர் ஒருவர் பெற்றுக் கொள்ளும் 4 அனுகூலங்களை குறிப்பிடுக.
3) மக்கட் சூழல், சட்டச்சூழல் தனித்தனியே வணிகமொன்று எவ்வாறு சந்தர்ப்பமாகவும் அச்சுறுத்தலாகவும் அமையும் என்பதை விபரிக்க.
4) பேரினச்சூழல் காரணிகள் வணிகத்தில் ஏற்படுவதற்கான தாக்கங்களை 2 உதாரணங்களுடன் குறிப்பிடுக.
5) தற்போது பூகோளச்சூழல் காரணமாக வணிகத்திற்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல்கள் 4 குறிப்பிடுக.

(5x4=20புள்ளிகள்)